DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. No: 339/2022** Date: 26.06.2025

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 2** |
| Name | : | கண்ணபிரான் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 26.06.2025.

**முதல் விசாரணை :—**

1. நான் தற்போது Hubli ல் இளநிலை எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2018 ம் வருடம் நான் தருமபுரி ரயில்வே பாதுகாப்புபடையில் தலைமை காவலராக பணியிலிருந்தபோது 11.04.2018 ம் தேதி காலை 11.00 மணியளவில் பா.ம.க கட்சியை சேர்ந்த வெங்கடேசன், சண்முகம் ஆகியோர் அவர்களது ஆதரவாரர்களுடன் தருமபுரி ரயில் நிலையத்திற்குள் எந்தவித முன் அனுமதியும் இல்லாமல் அத்துமீறி உள்ளே நுழைந்து ரயில் நிலையத்திற்குள் அப்போது வந்த ரயிலின் 56314 பெங்களூரிலிருந்து காரைக்கால் செல்லும் ரயிலை காவிரி விவகாரம் குறித்து மத்திய, மாநில அரசை கண்டித்து மறித்தார்கள். 11.23 முதல் 11.29 வரை ரயில் நிறுத்தப்பட்டிருந்தது. அதில் 2 நிமிடம் மேற்படி ரயில் எப்போதும் தருமபுரி ரயில் நிலையத்தில் நின்று செல்வதற்காக ஒதுக்கப்பட்ட நேரமாகும்.

2. அன்றைய தினம் யாரும்கைது நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அவர்கள் கலைந்து சென்றுவிட்டார்கள். அன்றைய தினம் சம்பவ இடத்தில் வைத்து மகஜர் தயார் செய்யப்பட்டது. அதில் நானும், சிவக்குமார் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் மகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **மகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆகும்.** இது குறித்து போலிசார் என்னை

விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை** – எதிரிகள் ஆஜரில் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லை. போதிய சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. No: 339/2022** Date: 26.06.2025

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 3** |
| Name | : | நாகராஜன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 26.06.2025.

**முதல் விசாரணை :–**

1. நான் தருமபுரி ரயில்வே பாதுகாப்பு படையில் துணை உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 11.04.2018 ம் தேதி காலை 7.00 மணிக்கு எனக்கு நுண்ணறிவு பிரிவிலிருந்து தருமபுரி ரயில் நிலையத்தில் மத்திய, மாநில அரசுகளை கண்டித்து போராட்டம் நடத்தப்போவதாக கிடைத்த தகவலின் பேரில் தருமபுரி ரயில் நிலையத்திற்கு போலிசார் காவலுக்காக பணியமர்த்தப்பட்டிருந்தார்கள். அன்றைய தினம் காலை சுமார் 11.00 மணிக்கு பா.ம.க. கட்சியை சேர்ந்தவர்கள் சண்முகம், மாநில செயலாளர், பா.ம.க. மற்றும் வெங்கடேசன் ஆகியோர் தலைமையில் சுமார் 350 நபர்கள் தருமபுரி ரயில் நிலையத்திற்குள் கூடினார்கள். அப்போது தருமபுரி ரயில் நிலைய பிளாட்பார்ம் எண்.2 ல் உள்ளே வந்த காரைக்கால் ரயில் எண். 56514 வருவதை பார்த்து மேற்படி ரயிலின் எஞ்சினுக்கு முன்னதாக நின்றுக்கொண்டு போராட்டம் செய்தார்கள்.

2. 11.23 மணிக்கு மேற்படி ரயில் ரயில் நிலையத்திற்கு வந்து 11.25 மணிக்கு புறப்படவேண்டும் ஆனால் மேற்படி போராட்டம் காரணமாக 11.25 மணிக்கு கிழம்ப வேண்டிய காரைக்கால் வண்டி 11.29 மணிக்கு 04 நிமிடம் காலதாமதமாக புறப்பட்டு சென்றது. இது சம்பந்தமாக தருமபுரி ஸ்டேசன் மாஸ்டர் புகார் அளித்தார். நான் சம்பவ இடத்தில் சாட்சிகள் சிவக்குமார் மற்றும் கண்ணபிரான் ஆகியோர் முன்னிலையில்

மகஜர் தயார் செய்தேன். இது குறித்து போலிசார் விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை** – எதிரிகள் ஆஜரில் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லை. போதிய சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.